17.03.2026 OS.No.83/2021

சாட்சி : DW 1 சரவணன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. நான் எந்த வருடத்திலிருந்து வேலைக்கு செல்ல ஆரம்பித்தேன் என்றால் 1995 லிருந்து வேலை செய்ய ஆரம்பித்தேன். தற்போது என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஓட்டுநர் பணியில் எப்போது வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 2007 ஆண்டில் சேர்ந்தேன். ஓட்டுநர் பணியில் சேரும்போது எனது மாத வருமானம் என்னவென்றால் மாதம் ரூ.15 ஆயிரம் இருக்கும். எனக்கு வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. என் வருமானத்தில் செலவுகள் போக மீதிமுள்ள தொகை என் வங்கி கணக்கில் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆமாம். என் மனைவி என்னுடன் தான் உள்ளரா என்றால் உள்ளார், அவர் பெயர் கார்த்திகா என்ற திவ்யா ஆகும், அவர் இரண்டாவது மனைவி ஆவார். ஏற்கனவே எனக்கு விவாகரத்து ஆகிவிட்டதா என்றால் முதல் மனைவியுடன் விவாகரத்து ஆகிவிட்டது. முதல் மனைவியினுடனான விவாகரத்து எப்போது நடந்தது என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

2. நான், என் சொத்தை என் தகப்பனாருக்கு தான செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மென்டை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன சொத்து தானமாக கொடுத்தேன் என்றால் சி செடியூல் சொத்தை தானமாக கொடுத்தேன். அந்த சொத்தை முதலில் நான் தானமாக என் அப்பாவிற்கு கொடுத்துவிட்டு அதன் பின்னர் என் அப்பா என் பெயரில் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். 04.04.2012 ல் எனக்கும் என் முதல் மனைவிக்கும் விவாகரத்து நடந்த சமயத்தில் என் சொத்தை என் அப்பாவின் பெயருக்கு தான செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் என் சொத்தை என் அப்பாவிற்கு அன்பு மற்றும் அபிமானத்தின் பெயரில் தான செட்டில்மென்டாக எழுதி சொத்தில் மாற்றம் செய்தேன் என்றால் சரிதான்.

மேற்குறிப்பிட்ட சொத்தை என் முதல் மனைவி பற்றுகை செய்துவிடக்கூடாது என்ற காரணத்தில்தான் அச்சொத்தை பொறுத்து தான செட்டில்மென்ட் என் தகப்பனார் பெயரில் எழுதி வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையும், தாயாரும் அரசு பணியில் இருந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் இரண்டுபேரின் இறப்பு பணி பலன்கள் எனக்கு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அவர்களின் வங்கி கணக்குகள் என் கைவசம் உள்ளதா என்றால் எனக்கும் எந்த தந்தைக்கும் கூட்டு கணக்கு உள்ளது, அந்த விபரம் தெரியும், மற்ற விபரங்கள் தெரியாது.

3. அந்த கூட்டு வங்கி கணக்கின் பாஸ் புத்தகமோ, அது தொடர்பான வேறு விபரங்களோ என் கைவசம் உள்ளதா என்றால் தற்போது எடுத்துவரவில்லை, அந்த வங்கி கணக்கு இந்தியன் வங்கி, கடையநல்லூர் கிளை, தென்காசி மாவட்டத்தில் உள்ளது. தற்போது அந்த வங்கி கணக்கில் பரிவர்த்தனை மேற்கொண்டு வருகிறேனா என்றால் ஆமாம். பணி ஓய்விற்கு பின்பு என் தாய், தந்தைக்கு எவ்வளவு ஓய்வூதியம் வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்குறிப்பிட்ட என் தந்தை மற்றும் என் பெயரிலான கூட்டு வங்கி கணக்கின் பாஸ்புத்தகத்தின் நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அவகாசம் கொடுத்தால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதியபோது நான் உடன் இருந்தேன் என்றால் இல்லை, 2020ம் வருடம் என் அப்பா சொன்னார். என் அப்பா இறப்பதற்கு முன்பு வரை நல்ல ஆரோக்கியத்தில் தான் இருந்தார் என்றால் என் தகப்பனார் இறப்பதற்கு 10 தினங்களுக்கு முன்பு கொரோனா நோய் தொற்று உள்ளது என்று மதுரை அப்போலோ மற்றும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது, அதற்கு முன்புவரை நல்ல ஆரோக்கியத்தில் தான் இருந்தார். என் முதல் திருமணத்திற்கு முன்பிலிருந்தே என் தாயார் உடல்நிலைகுன்றியிருந்தார் என்றால் பக்கவாதம் நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். பக்கவாதத்தில் எந்த பகுதி பாதிக்கப்பட்டிருந்தது என்றால் இடது கை மற்றும் இடது கால் பாதிக்கப்பட்டிருந்தது.

4. என் தாயாருக்கு இந்து உடல்நலக்குறைவுக்கு மருத்துவச் செலவுகளை நான் தான் பார்த்துக்கொண்டேனா அல்லது அவர்களின் பென்சனில் இருந்து செலவு செய்யப்பட்டதா என்றால் இரண்டுமேதான். மதுரை அப்போலோ மற்றும் சிவகங்கை அரசு

மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோது என் தகப்பனாருடன் இருந்தது நான் தான் என்றால் சரிதான். என் தகப்பனார் உள்நோயாளியாக எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் மதுரை அப்பலோ மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அன்றைய தினமே மருத்துவ வசதி இல்லாத காரணத்தில் சிவகங்கை அரசு மருத்துமனைக்கு அழைத்து சென்றுவிட்டேன். அதற்கு உண்டான ஆவணங்கள் எதுவும் நான் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள நபர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் என் தகப்பனாரின் கையெழுத்தில் மாறுபாடு உள்ளதா என்றால் சரியாக உள்ளது.

5. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் என் தகப்பனாரின் கையெழுத்தில் மாறுபாடு உள்ளது என்றும், அதனை மறைத்து நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. உயில் சாசனமானது என் அச்சுறுத்தலின் பேரிலும், மிரட்டலின் பேரிலும் தான் ஏற்பட்டுத்தப்பட்டு, அதனால் தான் என் தந்தையின் கையெழுத்தில் மாறுபாடு உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த உயில் சாசனம் எழுதி வைக்கப்பட்டபோது என் தந்தை மனநலம் சரியில்லாமலும், தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்பது தெரியாமல் இருந்தபோது மோசடியாக பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் கையெழுத்து எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் அது என் அப்பாவிற்கு வாதியின் கணவர் கைப்பட எழுதிய கடிதம் ஆகும். பி.வா.சா.ஆ.10 ஆவணம் என்னால் போலியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அந்த ஆவணம் வாதியின் கணவரால் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவின் உயில் சாசனத்தையும், அவர் எனக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் தான செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள கையெழுத்தையும் கையெழுத்து நிபுணர் வசம் ஒப்படைத்து பரிசீலிக்க எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் என் தாயார் எழுதி வைத்ததாக சொல்லப்பட்டும் உயில் சாசனத்தில் உள்ள கையெழுத்தையும், என் தாயாரின் இதர

கையெழுத்துக்களையும் கையெழுத்து நிபுனர் வசம் ஒப்படைத்து பரிசீலிக்க எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

6. என் தாயார் கைவசம் இருந்த நகைகள் குறித்து என்னிடம் பட்டியல் உள்ளதா என்றால் அந்த நகைகள் அனைத்தும் என் அக்காவசம் கொடுக்கப்பபட்டுவிட்டது, அவர் வழக்கு வாதியாவார். அவ்வாறு யார் சொன்னார்கள் என்றால் அதுபற்றி உயிலிலேயே எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட சீர் என்று சொல்லப்பட்டுள்ளது, அதற்கு பின்னீடு என் தாயார் வசம் இருந்த நகைகளும் வாதிக்கு கொடுத்ததாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வாதியின் திருமணத்திற்கு பின்பு என் தாயார் வசம் இருந்த நகைகள் அனைத்தும் என் வசம் இருந்தது என்றால் இல்லை. வாதியின் திருமணத்திற்கு பின்பு என் தாயார் வசம் எவ்வளவு நகைகள் இருந்திருக்கும் என்றால் அப்படி நகைகள் எதுவும் இல்லை. என் தாயார் பணியில் இருந்து ஓய்வு பெரும்போது எந்த பிரிவில் இருந்து பணி ஓய்வு பெற்றார் என்றால் அவர் கடையநல்லூர் பள்ளியின் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்றார். என் அப்பா பணி ஓய்வு பெரும்போது எந்த துறையில் இருந்தார் என்றால் பணி ஓய்வு பெரும்போது காரைக்குடியில் கால்நடை துறையில் பணியில் இருந்தார். வழக்கிடைச் சொத்தில் வாதிக்கு பாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல. உயில் சாசனம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயில் சாசனத்தில் கையெழுத்து செய்த இரண்டு சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன், பரமசிவம் என்ற சாட்சி இறந்துவிட்டார், மற்றொரு சாட்சி எங்கள் உறவினர். என் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் என் அப்பா, அம்மாவால் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் வாங்கும் அளவிற்கு எனக்கு அப்போது வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் பங்கை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் நான் இருந்தேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குறியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஓம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.